அ.வ.எண்: 11/2022 நாள்:16.02.2023

வா.சா.1. முகமது பாரூக்

1 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) நான் எந்த சொத்து சம்மந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் குஜராத் அசோசியேசனில் இருந்து கிரையம் பெற்றது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து குஜராத் அசோசியேசனுக்கு சம்மந்தமானது என்று ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்குரையில் சொல்லியுள்ள குஜராத் அசோசியேசனுக்கு வா.சா.ஆ.2 மற்றும் 3 என்ன ஆவணம் என்றால் நீதிமன்றத்தில் வாங்கிய ஆடர் காப்பி ஆகும். 1 வது பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

2) எதிர்வழக்குரையில் குஜராத் அசோசியேசன் வாடகைக்கு இருந்தது என்று சொல்லியுள்ளது என்றால் அவர்கள் வாடகை செலுத்தியது சைக்கிள் ஸ்டாண்டுக்கு மட்டும் தான். தாவா சொத்து தொடர்பான ஆவணங்கள் அனைத்திலும் குஜராத் அசோசியேசன் பெயர் இல்லை என்று சொன்னால் குஜராத் அசோசியேசன் பெயரில் தான் ரிஜிஸ்டர் செய்தோம். 07.12.1999 ல் கிரைய பத்திரத்தின் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்தீர்களா என்றால் இல்லை. வட்டாட்சியர் மற்றும் ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன் இது வரை எந்த பதிலும் வரவில்லை. தாவா சொத்து பட்டா மாறுதல் செய்யாததற்கு காரணம் 1 வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை.

3) இந்த வழக்கில் 2 வது பிரதிவாதி மற்றும் 3 வது பிரதிவாதி மீது எந்த பரிகாரமும் கோரவில்லை என்று சொன்னால் தாவா சொத்து சம்மந்தமாக அவர்களிடம் மனு தாக்கல் செய்துள்ளதால் பரிகாரம் கோரவில்லை. 2,3 வது பிரதிவாதியிடம் எப்போது எதற்காக மனு தாக்கல் செய்தேன் என்றால் பட்டா மாறுதல் செய்வதற்காக மனு செய்தேன். 1 வது பிரதிவாதி தாவா இடம் அவருக்கு சொந்தமானது என்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் ஆமாம் நான் அதற்கு பதில் அறிவிப்பு கொடுத்தேன்.

4) வழக்கறிஞர் அறிவிப்பு கிடைத்த பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.22/1922 மற்றும் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 3/1885 மற்றும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் மே.மு.எண். 192/1888 இந்த 3 வழக்குகளும் குஜராத் அசோசியேசன் என்ன என்ன சொத்து என்பதை உறுதி செய்வதற்காக நடந்த வழக்குதான்.

தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.